இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 223 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 10 – திங்கள்கிழமை 24 மார்ச் 2025 – மதுரை 12 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 223 : Thiruvalluvar Year - 2056 - Panguni 10 - Monday 24 March 2025 - Madurai 12 Pages ₹ 5.00


### துறைமுகம் காஜா தலைமையில் – டாக்டர் சுபேர்கான் முன்னிலையில் இன்று

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் ரமலான் நோன்பு திறப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை! கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

**சென்னை, மார்ச் 24 -**

**கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நடத்தும் இஃப்தார் புனித ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சி இன்று (24.3.2025-திங்கள்) மாலை 4 மணிக்கு திருவான்மியூர் இராமச்சந்திரா கன்வென்சன் ஹாலில் நடைபெறுகிறது.**

நிகழ்ச்சிக்கு தலைமை நிலையச் செயலாளர் தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா தலைமை தாங்குகிறார். சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் முன்னிலை வகிக்கிறார்.

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்.



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் முகைதீன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர், எம்.எச்.ஜவாஹிருல்லா, முன்னாள் காங்கிரஸ் எம்.பி. சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ் மாநில தேசிய லீக் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப், இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது, மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷா நவாஸ்,

தமிழ்நாடு அரசு துணை முதன்மை காஜி முகமது அக்பர் அலி ஷா ஆமிரி, தமிழ்நாடு அரசு தலைமை காஜி (ஷியா) மௌலானா குலாம் முஹம்மது மெஹ்திகான், தலைமை இமாம் மந்தைவெளி ஈக்தா பள்ளி வாசல் மௌலானா கே.எம். இல்யாஸ் ரியாஜி சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், பேராசிரியர் டாக்டர் முஹம்மது ரேலா, கே.நபாஸ்கனி எம்.பி., ஜோ அருண் (தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையம்) கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமைக் கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தயாநிதி மாறன் எம்.பி., தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு,

மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி, துணை மேயர் மு.மகேஷ் குமார், பகுதிச் செயலாளர் துரை கபிலன், துணை அமைப்புச் செயலாளர் எஸ். ஆஸ்டின், அசன் மவுலானா எம்.எல்.ஏ.,

வட்டச் செயலாளர் ராஜாரமணன் மற்றும் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

---

### வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதா

## இந்திய அரசியலமைப்பின் மீதான தாக்குதல்!

**காங்கிரஸ் குற்றச்சாட்டு!**

*புதுடெல்லி, மார்ச் 24 -*

வக்பு திருத்த மசோதாவை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் மீண்டும் தாக்கல் செய்து நிறைவேற்ற ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில், இவ்விவகாரம் குறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வக்பு மசோதா பா.ஜ.க. சதித் திட்டங்களின் ஒரு பகுதி என்றும், நமது தனித்துவமான பல மதங்களைக் கொண்ட சமூகத்தில் பல நூற்றாண்டுகள் நிலவும் சமூக நல்லிணக்கப் பிணைப்புகளைச் சேதப்படுத்தும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாகும் என்றும்,

தவறான பிரச்சாரங்கள் மூலம் சிறுபான்மை சமூகங்களை வன்முறையாளர்களாக பா.ஜ.க.வினர் சித்தரிக்க முயல்வதாகவும் அவர் விமர்சித்துள்ளார்.

மேலும், எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை எல்லாம் நிராகரித்துவிட்டு, பிரிவு வாரியாக உரிய விவாதம் நடத்தப்படாமல் 428 பக்க அறிக்கையை நாடாளுமன்ற கூட்டுக்கு வழங்கியுள்ளதாகவும், இதன் மூலம் இக்கூட்டுக்குழு நாடாளுமன்ற நடைமுறைகளை மீறி செயல்பட்டுள்ளதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குற்றம் சாட்டியுள்ளார்.

---

### தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் ஒன்றிய அரசு நியாயமற்ற நடவடிக்கை:

# பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்கள் மீது திட்டமிட்ட தாக்குதல்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, மார்ச் 24 -**

**நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் ஒன்றிய பா.ஜ.க. அரசு பாரபட்ச முறையிலும், நியாயமற்ற முறையிலும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்கள் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்துவதாகவும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குற்றம்சாட்டி உரையாற்றினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (22.3.2025) சென்னையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த கட்சி பிரதிநிதிகளின் கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விளக்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர், அமைச்சர்கள், மதிப்பிற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மரியாதைக்குரிய அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் எனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது முதலமைச்சர் அவர்கள், நமது உரிமைகளும் குரல்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள மிக முக்கியமான இந்த நேரத்தில், இந்தக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

ஒன்றிய அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லை நிர்ணய அச்சுறுத்தலை எதிர்கொள்ள நாம் ஒன்றிணைந்ததில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நமது முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, குறிப்பாக ஒன்றிய அரசு பரிந்துரைத்த குடும்பக் கட்டுப்பாடு கொள்கைகளை திறம்பட செயல்படுத்திய மாநிலங்களில்.



முன்மொழியப்பட்ட எல்லை நிர்ணயப் பிரச்சினையின் தாக்கங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்,

இந்த விளக்கக்காட்சியில் ஐந்து முக்கியமான பகுதிகளை நான் முன்னிலைப்படுத்த விரும்புகிறேன்:

1. மக்கள்தொகை வளர்ச்சியின் போக்கு.

2. எல்லை நிர்ணய பயிற்சிகளின் வரலாறு.

3. எல்லை நிர்ணயம் செய்வதற்கான சாத்தியமான சூழ்நிலைகள்.

4. நம்மைப் போன்ற மாநிலங்களில் ஏற்படும் தாக்கம்.

5. நாம் ஏன் கைகோர்க்க வேண்டும்?

இங்குள்ள மாநிலங்கள், மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் நிர்வகிக்கவும் பல பத்தாண்டுகளாக, குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. நாம் கொள்கைகளை அறிமுகப்படுத்தினோம், விழிப்புணர்வை ஏற்படுத்தினோம், நிலையான மக்கள்தொகை வளர்ச்சிக்கான நாட்டின் நோக்கத்தை அடைந்தோம்.

வேறு சில மாநிலங்கள் விரைவான மக்கள்தொகை வளர்ச்சியை அனுபவித்தாலும், நாம் பொறுப்புடன் செயல்பட்டோம். இதன் விளைவாக, பல மாநிலங்களை விட மிக முன்னதாகவே மக்கள் தொகை மாற்று விகிதத்தை அடைந்தோம்.

**பிரதிநிதித்துவத்தை இழக்கும் அபாயம்!**

ஆனால் இந்த சாதனைக்கு வெகுமதி பெறுவதற்குப் பதிலாக, இப்போது நமது அரசியல் பிரதிநிதித்துவத்தை இழக்கும் அபாயத்தில் இருக்கின்றோம். இந்த வரைபடத்தில் உள்ள பச்சைக் கோடு, இக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள மாநிலங்கள் மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்தை எவ்வளவு திறம்படக் கட்டுப்படுத்தியுள்ளன என்பதை தெளிவாகக் காட்டுகிறது. மாறாக, ஊதா நிறக் கோட்டில், 1971 க்குப் பிறகு மற்ற மாநிலங்களில் மக்கள் தொகை வளர்ச்சி தொடர்ந்து அதிகரித்து வருவதை நீங்கள் காணலாம்.

இந்திய அரசியலமைப்பின் 82 வது பிரிவின்படி, ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பிறகும் நாடாளுமன்ற இடங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதன்படி, 1951 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இடங்களின் எண்ணிக்கை 489 இல் இருந்து 494 ஆக உயர்த்தப்பட்டது.

பின்னர் 1961 மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பிறகு இது 522 இடங்களாக அதிகரிக்கப்பட்டது. 1971 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், தற்போதுள்ள இடங்களின் எண்ணிக்கையை 543 ஆக நிர்ணயித்து கடைசியாக 1973 இல் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது,

மக்கள்தொகை கட்டுப்பாட்டு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்திய மாநிலங்களை ஊக்குவிக்கும் வகையில், எல்லை நிர்ணயப் பயிற்சியை முடக்குவதற்காக 1976 இல் இயற்றப்பட்ட 42 வது திருத்தத்தின்படி, 2000 வது ஆண்டு வரை அடுத்த 25 ஆண்டுகளுக்கு எல்லை நிர்ணயப்

**தொடர்ச்சி 4-ஆம் பக்கம்**

---

### தலைமைத் தேர்தல் அதிகாரி தலைமையில்

## இன்று அனைத்துக் கட்சி கூட்டம்!

*சென்னை, மார்ச் 24 -*

தலைமை தேர்தல் கமிஷனராக ஞானேஷ் குமார் சமீபத்தில் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளையும் அழைத்து ஆலோசனை கூட்டம் நடத்தினார்.

அதில், மாநிலங்களில் உள்ள அரசியல் கட்சிகளிடம் தேர்தல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து தேர்தல் விதிகளின் அடிப்படையில் அவற்றை தீர்த்து வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அதன்படி தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் இன்று (திங்கட்கிழமை) அனைத்துக் கட்சிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளார். இந்த கூட்டம் சென்னை தலைமை செயலகத்தில் உள்ள பிரதான கட்டிடத்தின் 2வது மாடியில் உள்ள கூட்டரங்கில் மதியம் 3 மணியளவில் நடைபெற உள்ளது.

---

### திட்டங்களைச் செயல்படுத்துவதை விட விளம்பரத்திற்கே முக்கியத்துவம்!

# ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் உற்பத்தித் துறை வெகுவாகப் பாதிப்பு!

## மல்லிகார்ஜுன கார்கே கடும் தாக்கு!

*புதுடெல்லி, மார்ச் 24 -*

“மோடி அரசு திட்டத்தை செயல்படுத்துவதை விட விளம்பரத்துக்கே முக்கியத்துவம் தரும் என்பதற்கு மேக் இன் இந்தியா நல்ல உதாரணம்” என காங்கிரஸ் கடுமையாக சாடி உள்ளது.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது: -

மோடி அரசு எந்தத் திட்டத்தையும் செயல்படுத்துவதை விட விளம்பரத்துக்கே முக்கியத்துவம் தரும் என்பதற்கு மேக் இன் இந்தியா நல்ல உதாரணம். கடந்த 2014ம் ஆண்டு மோடி ஆட்சிக்கு வந்தபோது இந்தியாவை உலகளாவிய உற்பத்தி மையமாக மாற்ற 10 வாக்குறுதிகளை பா.ஜ. அரசு கொடுத்தது.

அதில் ஒன்றுகூட நிறைவேற்றப்படவில்லை. உற்பத்தி துறைகளில் வேலை வாய்ப்பு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உற்பத்தியின் பங்கு பெருமளவு சரிந்திருப்பது நிலைமை மோசமாகி விட்டதை காட்டுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.



தொடர்ந்து பொதுத்துறை நிறுவனங்கள் விற்கப்படுகின்றன. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. இந்திய தொழில்முனைவோர்கள் இந்தியாவில் தொழில் தொடங்குவதற்கு பதிலாக வெளிநாடுகளுக்கு சென்று அங்கு நிறுவனங்களை அமைக்கின்றனர். ஏற்றுமதி துறை தடையற்ற வீழ்ச்சியை அடைந்துள்ளது. அடையாளம் காணப்பட்ட 14 துறைகளில் 12 துறைகள் வளர்ச்சிஅடையவில்லை.

இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் பொருள்களின் பங்கு கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மோடி அரசாங்கத்தின்கீழ் ஏன் மிகவும் குறைந்துள்ளது? காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் மொத்த ஏற்றுமதியில் பொருள்களின் பங்கு பெரிதும் துரிதப்படுத்தப்பட்டது என்பது உண்மை.

ஒருவேளை உண்மையான தற்சார்பு இந்தியா என்பது காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது என்பதை பிரதமர் மோடி இப்போது உணர்ந்திருக்கலாம்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

---

## விவசாயிகளை பேச்சு வார்த்தைக்கு அழைத்து கைது செய்த ஒன்றிய அரசு!

சண்டிகர், மார்ச் 24 –

பஞ்சாப் காவல்துறை, ஒன்றிய அரசின் துணை ராணுவம் இணைந்து பஞ்சாபில் விவசாய சங்கத் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்து கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து விளை பொருட்களுக்கு ஆதார விலையை நிர்ணயம் செய்ய வலியுறுத்தி பஞ்சாப், அரியானா மாநில விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று பஞ்சாப் மாநிலத்தில் பேராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை ஒன்றிய அரசு, பேச்சுவார்த்தைக்கு அழைப்பதாக கூறி பேச்சுவார்த்தைக்கு வந்த விவசாயிகளை கைது செய்தனர்.